

ஆசிரியரிடமிருந்து........!

# உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்

மீகா 7 : 15

இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்கள்! நாம் ஆராதிக்கும் இயேசு கிறிஸ்து அதிசயங்களைச் செய்யும் அதிசயமான தேவன் (நியா.13:18; சங்.72:18; 86:10; ஏசாயா 9:6). நீ எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளில் நடந்தது போலவே உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன் என்று வாக்குப்பண்ணுகிறார் (மீகா7:15). தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு எகிப்திலிருந்து புறப்பட்ட நாளிலிருந்து கானானை சுதந்தரிக்கும் நாள் மட்டும் செய்த அதிசயங்களை நம்முடைய வாழ்க்கையிலும் இந்த 2018ம் வருடம் செய்ய வல்லவராயிருக்கிறார். நீங்கள் அதை எதிர்பாருங்கள்! ஜெபித்துப் பெற்றுக் கொள்ளுங்கள்! தேவனாலே செய்யக் கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை (எரே. 32:17, 27).

## 1. விசேஷமான அதிசயம்

தேவன் மோசேயிடம் பூமியெங்கும் எந்த ஜாதிகளிடத்தில் செய்யப்படாத அதிசயங்களை உன் ஜனங்கள் எல்லாருக்கு முன்பாகவும் செய்வேன் என்றார் (யாத். 34 : 10). நம்முடைய தேவன் சர்வ வல்லமையுள்ளவர். தேவனுடைய செயல்கள் விசேஷமானவைகள். எகிப்தின் மந்திரவாதிகள் தேவன் செய்த காரியங்களைச் செய்ய முயற்சித்த போது அவர்களால் கூடாமற்போயிற்று என்று வேதம் கூறுகிறது (யாத்.8:18). மனிதனால் கூடாதவைகள் தேவனால் கூடும் (லூக். 18 : 27). இந்த வருடம் மனிதன் மேல் நீங்கள் இம்மட்டும் வைத்திருந்த நம்பிக்கையை விட்டு தேவன் மேல் நம்பிக்கை வையுங்கள். தேவன் நீங்கள் எதிர்பாராத விசேஷித்த காரியங்களை உங்களுக்குச் செய்வார்.

## 2. வித்தியாசத்தை உண்டு பண்ணின அதிசயம்

தேவன், என் ஜனங்களுக்கும் உன் ஜனங்களுக்கும் வித்தியாசம் உண்டாகும்படி செய்வேன் என்று பார்வோனிடம் கூறும்படி மோசேயிடம் பேசினார் (யாத்.8:23). அதின்படி யாத்.9:26-ல் இஸ்ரவேல் புத்திரர் இருந்த கோசேன் நாட்டிலே மாத்திரம் கல்மழை இல்லாதிருந்தது என்றும், யாத்.10: 22, 23ல் தேசமெங்கும் காரிருள் உண்டானபோது இஸ்ரவேல் புத்திரர் யாவருக்குமோ வெனில் அவர்கள் வாசஸ்தலங்களில் வெளிச்சம்

இருந்தது என்றும், யாத்.11:7-ல் தேவன் இஸ்ரவேல் புத்திரர் அனைவரையும் விசேஷமாகப் பாதுகாத்தார் என்றும் வேதம் கூறுகிறது. உங்கள் வாழ்விலும் தேவன், உங்களுக்கும் தேவனை அறியாத மற்றவர்களுக்கும் இடையே ஒரு வித்தியாசத்தை உண்டு பண்ணுவார். நீங்கள் ஆராதிக்கிற தேவன் ஆச்சரியமானவர் என்பதை ஜனங்கள் கண்டு கொள்வார்கள் (சங். 126 : 2).

## 3.விடுதலையாக்கின அதிசயம்

தேவன் இஸ்ரவேல் ஜனங்களை 430 ஆண்டுகள் அடிமைத் தனத்திலிருந்து அதிசயமாக விடுதலையாக்கினார். ஒன்பது வாதைகளுக்குப் பின்பு பத்தாவது வாதையாகிய எகிப்தியரின் முதற்பேறாயிருக்கிறவைகளை யெல்லாம் அதம் பண்ணி இஸ்ரவேல் ஜனங்களை இரத்தத்தினால் பாதுகாத்த போது, பார்வோனின் கடின இருதயம் மாறி தேவ ஜனங்களை தேவனை ஆராதிக்கும்படி வெள்ளியுடமைகளோடும், பொன்னுடைமைகளோடும் அனுப்பிவிட்டான் (யாத். 12:31-51). நம்முடைய ஆண்டவர் விடுவிக்கிறவர். அற்புதங்களிலேயே பெரிய அற்புதம் பாவ, சாப அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப் பெறுவதாகும். தேவன் உங்களுக்குத் தேவையான விடுதலையைக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார். மேலும் பல ஆண்டுகளாக உங்களுக்குள்ள நெருக்கங்கள், கடன் பிரச்சனைகள், சரீர பெலவீனங்கள் ஆகியவற்றிலிருந்து தேவன் உங்களை விடுவித்து உங்கள் நுகத்தடிகளை முறித்து, உங்களை தலைநிமிர்ந்து நடக்கப் பண்ணுவார் (லேவி. 26:13).

## 4.வழி திறக்கும் அதிசயம்

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகிப் புறப்பட்ட பின் அவர்கள் முன்பாக செங்கடல் தடையாக நின்றது. முன்னே கடல், பின்னே எகிப்தின் இராணுவம், என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்த மக்களுக்குத் தேவன் அதிசயம் செய்தார். செங்கடலைப் பிளந்தார். ஜனங்களை வெட்டாந்தரையில் நடத்தினார். எகிப்தின் சேனையைக் கடலில் கவிழ்த்துப் போட்டார் (யாத். 14 : 5-13; 15 : 19; சங்.66:6; 78:13; 106:9 ; எபி.11:29). தேவ ஜனமே, தேவன் நமக்காக அடைக்கப்பட்ட வழிகளைத் திறக்கிறவர். தடைகளை அகற்றுகிறவர். உங்களுக்காகப் ஒரு புது வழியை அதிசயமாகத் திறப்பார் (மீகா.2:13). சோர்ந்து போகாதிருங்கள், கலங்காதிருங்கள். நம் தேவன் ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்கிறவர் (சங். 136:4; ஏசாயா 43:19). யோர்தானும் வழி திறக்கும் (யோசுவா 3:15-17). எரிகோவின் அலங்கங்களும் இடிந்து விழுந்து வழி விடும் (யோசுவா 6:20). உங்கள் வேலையில்,தொழிலில், ஊழியத்தில் நீங்கள் சந்தித்து வரும் தோல்விகள் மாறும். தடைகள் விலகும். ஒரு திறந்தவாசலை உங்களுக்குத் தருவார் (வெளி.3 : 8).

## 5.வழி நடத்தின அதிசயம்

இஸ்ரவேல் ஜனங்களை தேவன் மிகவும் ஆச்சரியமாக 40 ஆண்டுகள் வழி நடத்தினார். முதலாவது அவர்களுடைய பயணத்திலே பகலில் மேகஸ்தம்பமாகவும், இரவிலே அக்கினிஸ்தம்பமாகவும் இருந்து (யாத். 13:21, 22), ஒரு தகப்பன் தன் பிள்ளையைச் சுமப்பது போலச் சுமந்து சென்றார் (உபா.1:31). இரண்டாவதாக அவர்களை அற்புதமாக வானத்தின்

மன்னாவினால் போஷித்தார். கன்மலையின் தண்ணீரால் தாகம் தீர்த்தார் (யாத்.16:4; நெகே.9:15,20; சங்.78:24,25;105:40,41). மூன்றாவதாக சரீரத்தில் நல்ல ஆரோக்கியம் தந்தார். அவர்கள் கோத்திரங்களில் பலவீனப்பட்டவன் ஒருவனும் இருந்த தில்லை என்று வேதம் கூறுகிறது (சங்.105:37; யாத்.15:26). தேவன் அவர்களை அதிசயமாக நடத்தினார். அவர்கள் வஸ்திரங்கள் மற்றும் பாதரட்சைகள் பழையதாய்ப் போகவில்லை. என்ன ஆச்சரியம்! அவர்களுக்கு ஒன்றும் குறைவுபடாதபடிக்கு அவர்களை அற்புதமாகப் பராமரித்து வந்தார் என்று வேதம் கூறுகிறது (நெகே. 9:21; உபா. 2:7; 8:15). இந்த தேவன் இன்றும் ஜீவிக்கிறார். உங்களையும் இவ்வருடத்தில் 12 மாதங்களும் 365 நாட்கள் அதிசயமாகப் பாதுகாத்துப் பராமரிப்பார்.

## 6. வர்த்திக்கப்பண்ணிய அதிசயம்

உபாகமம் 1:10-ல் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைப் பெருகப்பண்ணினார் என்று மோசே கூறுவதைக் காண்கிறோம். உபாகமம் 10:22-ல் எழுபது பேராய் எகிப்திற்குச் சென்ற ஜனங்களை, திரட்சியிலே வானத்தின் நட்சத்திரங்களைப் போலாக்கினார் என்று வேதம் கூறுகிறது. தேவன் நம்மை ஆசீர்வதித்து ஆயிரம் மடங்காகப் பெருகப்பண்ணுகிறவர் (உபா.1:11). வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளிலும், ஊழியத்திலும் இவ்வருடத்தில் ஒரு பெருக்கத்தை எதிர்ப்பாருங்கள். தேவன் நமக்குப் பொருளாதாரத்திலும் ஆத்துமாக்களிலும் பெருக்கத்தைத் தந்து ஆசீர்வதிப்பார். தேவனுடைய ராஜ்யத்தில் நமது பணம், நேரம், திறமைகளை விதைத்து அறுவடையைப் பெற்றுக் கொள்வோம்!

## 7. விஸ்தாரமான தேசத்தைச் சுதந்தரிக்கச் செய்த அதிசயம்

யோசுவாவின் தலைமையில் இஸ்ரவேல் ஜனங்கள் 31 ராஜாக்களை மேற்கொண்டு, விஸ்தாரமான கானான் தேசத்தை சுதந்தரித்தார்கள் (யோசுவா 12 : 24; 13 : 1, சங். 135 : 9-12 ; 137 : 17-22). நம் ஆண்டவர் நமது எதிரியான சாத்தான்மேல் நமக்கு ஜெயத்தைத் தந்து இந்தப் பட்டணத்தை, தேசத்தை, பரலோக ராஜ்யத்தை சுதந்தரிக்க நமக்கு உதவி செய்வார். நாம் ஜெபத்தினாலும், விசுவாசத்தினாலும் சாத்தானின் கிரியைகளை முறியடித்து ஆவிக்குரிய வாழ்வில் முன்னேறுவோம்! தேவனுடைய வாக்குத்தத்தங் களையும், ஆசீர்வாதங்களையும் சுதந்தரித்துக் கொள்வோம்!.

இஸ்ரவேல் ஜனங்களில் அநேகர் மேற்கூறப்பட்ட தேவனுடைய அற்புதங்களுக்குப் பாத்திரவான்களாய் இல்லை. ஏனெனில் அவர்களுடைய பாவம் (எபி. 3:17), கீழ்ப்படியாமை (3:18) அவிசுவாசம் (3:19) தேவனுடைய அற்புதத்தை அவர்களுடைய வாழ்க்கையில் தடை செய்தது. நாம் அப்படியிராமல் பரிசுத்தத்தோடு (யோசுவா 1:5), விசுவாசத்தோடு (யோவான் 11:41), கீழ்ப்படிதலோடு (யோவான் 2:8), ஜெபத்தோடு (மாற்கு 10:47-49) நம்மை ஆயத்தப்படுத்தி தேவனுடைய அற்புதங்களைப் பெற்றுக் கொள்வோம்!.

**Rev.Dr. ஜெரி டேனியல்,**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்),
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி.